**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அவினாசி**

**முன்னிலை: திரு.எஸ்.வடிவேல், பி.எஸ்.சி., பி.எல்.,**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி, அவினாசி**

**2022 ஆம் ஆண்டு, செப்டம்பர் மாதம் 14 ஆம் நாள், புதன்கிழமை**

**இ.நி.ம.எண்.3/2022**

**இன்**

**அசல் வழக்கு எண்.89/2018**

1. ஆர்.கே.ராமசாமி (இறப்பு)

2. ராஜம்மாள்

3. ஆர்.பாலசுந்தரி (எ) ஆர்.சுந்தரி

4. கே.வசந்தி

5. பி.மணியரசி

6. கிருஷ்ணமூர்த்தி

7. கஸ்தூரிபாய் (எ) கஸ்தூரி

8. ஆர்.தர்மராஜ்

9. ஆர்.செல்வராஜ் ..மனுதாரர்கள்/வாதிகள்

//எதிர்//

1. எஸ்.கோபால்

2. எஸ்.முருகேஸ்

3. பி.கிருஷ்ணமூர்த்தி

4. என்.தெய்வசிகாமணி

5. வி.பாலசுப்ரமணியம் (அசல் வழக்கு இந்த பிரதிவாதிக்கு எதிராக 23.03.2010 ல் தள்ளுபடி செய்யப்பட்டது)

6. சார் பதிவாளர், அவிநாசி

7. சாரதாதேவி

8. கே.ஜெய்லட்சுமி ...எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு இந்நீதிமன்றத்தின் முன்பாக கடந்த 03.08.2022ம் தேதியில் இறுதி விசாரணைக்காக வந்தபோது, மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.யு.எம்.சௌந்தரபாண்டியன் அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.டி.சுந்தர்ராஜ் அவர்கள் ஆஜராகியும், 6 முதல் 8 எதிர்மனுதாரர்கள் தோன்றாத்தரப்பினராக கருத்தப்பட்டும், (5ம் எதிர்மனுதாரருக்கு எதிராக அசல் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது) ஆவணங்களை பரிசீலித்தும் இதுநாள் வரை இந்நீதிமன்றப் பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## உத்தரவு

இம்மனுவானது, 15.07.1996 தேதியிட்ட ஆவண எண்.3085/1996 கிரைய ஆவணத்தில் உள்ள ஆர்.கே.ராமசாமியின் கைரேகையையும், ஒப்புக்கொள்ளப்பட்ட ஆர்.கே.ராமசாமியின் கைரேகையையும் கைரேகை நிபுணருக்கு அனுப்பி, ஒப்பீடு செய்து அறிக்கை பெற வேண்டி பிரிவு 45ன் படி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுவின் சுருக்கம்:–**

இம்மனுவின் 5ம் மனுதாரர், அசல் வழக்கில் 5ம் வாதி ஆவார். 1ம் வாதி ஆர்.கே.ராமசாமி 5ம் மனுதாரரின் தகப்பனார் ஆவார். வழக்கு நிலுவையில் இருக்கும்போது, மேற்படி 1ம் வாதி இறந்துவிட்டார். அசல் வழக்கானது விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி எதிர்மனுதாரர்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆர்.கே.ராமசாமி கடந்த 15.07.1996, ஆவண எண்.3085/1996 ஆக கிரைய ஆவணம் 2ம் எதிர்மனுதாரருக்கு எழுதிக்கொடுக்கவில்லை. 1ம் எதிர்மனுதாரர், மேற்படி ஆர்.கே.ராமசாமியிடமிருந்து வெவ்வேறு வெற்று முத்திரைத்தாளில் ஏமாற்றி கையெழுத்து பெற்று, பொய்யான கிரையப்பத்திரத்தை 2ம் எதிர்மனுதாரர் உருவாக்கியுள்ளார். மேற்படி ஆர்.கே.ராமசாமி அவிநாசி, சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்று எவ்வித கிரையப்பத்திரத்திலும் கைரேகையோ அல்லது கையொப்பமோ செய்யவில்லை. கிரையப்பத்திரத்தில் 2வது பக்கத்தில் காணப்படும் கைரேகையோ அல்லது கையொப்பமோ ஆர்.கே.ராமசாமியுடையது அல்ல. கடந்த 15.07.1996 தேதியிட்ட கிரையப்பத்திரம் தூண்டுதலின் பேரில் மோசடியாக ஏற்படுத்தப்பட்டது. மேற்படி கிரையப்பத்திரம் போலியானது என்பதால் மனுதாரர்களை கட்டுப்படுத்தாது. எனவே, 15.07.1996 தேதியிட்ட ஆவண எண்.3085/1996 கிரைய ஆவணத்தில் உள்ள ஆர்.கே.ராமசாமியின் கைரேகையையும், ஒப்புக்கொள்ளப்பட்ட ஆர்.கே.ராமசாமியின் கைரேகையையும்

கைரேகை நிபுணருக்கு அனுப்பி, ஒப்பீடு செய்து அறிக்கை பெற வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. <u>எதிருரையின் சுருக்கம் பின்வருமாறு:</u>

இம்மனு சட்டப்படியும் சங்கதிகள் படியும் நிலைக்கத்தக்கதல்ல. எதிர்மனுதாரர் ஒப்புக்கொண்டவற்றை தவிர மற்றவைகளை மனுதாரரே நிரூபணம் செய்ய வேண்டும். ஏற்கனவே, இ.நி.ம.எண்.398/2011—ல் 1ம் வாதி ஆர்.கே.ராமசாமியின் கைரேகை குறித்து கைரேகை நிபுணர், அரசு தடயவியல் துறை, சென்னைக்கு அனுப்ப கோரிய மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. 15.07.1996 தேதியிட்ட கிரையப்பத்திரம் அசல் மனுதாரர்களால் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, கைரேகை நிபுணருக்கு ஒப்பீடு செய்ய ஆர்.கே.ராமசாமியின் ஒப்புக்கொள்ளப்பட்ட கைரேகை அனுப்பப்பட்டது. கையெழுத்து நிபுணர் 15.07.1996 கிரைய ஆவணத்தின் முதல் பக்கத்திற்கு பின்னால் உள்ள ஆர்.கே.ராமசாமியின் கைரேகையை எடுத்து ஆய்வு செய்ததில் இரண்டு கைரேகைகளும் ஒட்டுந்தன்மை உடையதாக அறிக்கை பெறப்பட்டுள்ளது. மீண்டும் மனுதாரர்கள் இ.நி.ம.எண்.1331/2018 மனு தாக்கல் செய்யப்பட்டு, அவிநாசி சார் பதிவாளர் அலுவலரின் கைரேகை பதிவுக்கு அனுப்பி, 1ம் வாதியின் ஒப்புக்கொள்ளப்பட்ட கைரேகையை ஒப்பிட்டு பார்க்க கோரி மனு தாக்கல் செய்திருந்தார். மேற்படி மனு இந்நீதிமன்றத்தால் தள்ளுபடி

செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்கள் வா.சா.1ன் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டு, குறுக்கு விசாரணைக்காக வாய்தா போடப்பட்டது. வா.சா.1 பல வாய்தாக்களில் வேண்டுமென்றே குறுக்கு விசாரணைக்கு ஆஜராகவில்லை. நிபந்தனையுடன் குறிப்பிட்ட தேதியில் நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டுமென்று உத்தரவு போட்டும் வா.சா.1 நீதிமன்றத்தில் முன்னிலையாகவில்லை. மனுதாரர்கள் இம்மனுவை 3 வது முறையாக தாக்கல் செய்துள்ளார்கள். 3 வது முறையாக இம்மனுவை தாக்கல் செய்வதற்கு மனுதாரர்களுக்கு எவ்வித உரிமையும் இல்லை. வழக்கை காலதாமதப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்திற்காகவே இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே இம்மனு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று வேண்டப்பட்டுள்ளது.

**4.** இரு தரப்பினருக்கும், போதிய வாய்ப்பு கொடுத்த பிறகும், இரு தரப்பினரும் அவர்களது தரப்பு வாதத்தை முன்வைக்கவில்லை. எனவே, இரு தரப்பு வாதத்தை இந்நீதிமன்றம் தன்னிச்சையாக முடித்து உத்தரவிட்டுள்ளது. மனுதாரர்கள் தரப்பில், சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் முன்னிலைப்படுத்தவில்லை. எதிர்மனுதாரர்கள் தரப்பிலும் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் முன்னிலைப்படுத்தவில்லை.

5. **பிரச்சனை:**

இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா என்பதேயாகும்.

6. **பிரச்சனைக்கான தீர்வு :**

இம்மனுவின் தரப்பினர்களில் மனுதாரர்களை வாதிகள் என்றும், எதிர்மனுதாரர்களை பிரதிவாதிகள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த அசல் வழக்கானது அவிநாசி சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட 15.07.1996 தேதியிட்ட கிரைய ஆவண எண்.3085/1996–ம், அவிநாசி சார் பதிவகத்தில் பதிவு செய்யப்பட்ட 06.02.2004 தேதியிட்ட கிரைய ஆவண எண்.565/2004–ம் செல்லாது என்றும், வாதியை கட்டுப்படுத்தாது என்றும் விளம்புகை பரிகாரம் கோரியும், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**7**) இந்த அசல் வழக்கானது தற்போது வாதி தரப்பு சாட்சியத்திற்காக நிலுவையில் இருந்து வா.சா.1 ஆக 5ம் மனுதாரர் விசாரணை செய்யப்பட்டு, தற்போது வா.சா.1–ஐ குறுக்கு விசாரணை செய்வதற்காக வழக்கு விசாரணை நிலுவையில் உள்ளது. தாவா சொத்தானது 1ம் வாதி ஆர்.கே.ராமசாமிக்கு 15.07.1993 தேதியிட்ட ஆவண எண்.2094/1993 கிரைய ஆவணத்தின்படி பாத்தியப்பட்டது என்றும், 1ம் பிரதிவாதி வாதியை அணுகி அவருக்க உள்ள கடன்களை தீர்க்க தாவா சொத்தை அடைமானம் வைக்குமாறு

வற்புறுத்தியதாகவும், அதன் அடிப்படையில், 1ம் வாதியை 15.07.1996ல் முதலாவது பிரதிவாதி 5ம் பிரதிவாதியின் வீட்டிற்கு அழைத்துச் சென்றதாகவும், அங்கு ஏற்கனவே 2ம் பிரதிவாதி இருந்ததாகவும், 1ம் பிரதிவாதி 5ம் பிரதிவாதியை நிதி நிறுவனர் என்று அறிமுகப்படுத்தியதாகவும், 1ம் பிரதிவாதி, 1ம் வாதியின் கையொப்பங்களை பல்வேறு நிரப்பப்படாத பத்திர தாள்களில் எடுத்துக்கொண்டதாகவும், அனைத்து அசல் உரிமை ஆவணங்களையும் பெற்று 5ம் பிரதிவாதியிடம் கொடுத்துவிட்டதாகவும், 1ம் வாதி வழக்கு சொத்தை அடைமானம் வைத்ததாகவும், பல வருடங்களுக்கு பிறகு 1ம் பிரதிவாதி அசல் ஆவணங்களை திருப்பிக்கொடுக்க எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், 1ம் பிரதிவாதியை அணுகி அசல் ஆவணங்களை கேட்டபோது சரியான முறையில் அவர் பதில் அளிக்கவில்லை என்றும், வழக்கு சொத்தை 2ம் பிரதிவாதிக்கு, 1ம் பிரதிவாதி விற்றுவிட்டதாக உறவினர்கள் மூலமாக தெரிய வந்ததாகவும், வாதி 6ம் பிரதிவாதியை அணுகி வில்லங்க ஆவணம் போட்டு பார்த்தபோது 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு கடந்த 15.07.1996ல் கிரையம் கொடுத்துள்ளதும், அதனை தொடர்ந்து 06.02.2004 தேதியில் 2ம் பிரதிவாதி 3, 4 பிரதிவாதிகளுக்கு தாவா சொத்தை விற்பனை செய்துவிட்டதாக தெரிய வந்ததாகவும், மேற்படி ஆவணங்களில் ஆர்.கே.ராமசாமி ஆகிய 1ம் வாதி கையொப்பம் எதுவும் இடவில்லை என்றும், ஆள்மாரட்டம் மற்றும் மோசடியாக

கையொப்பம் பெறப்பட்டு ஆவணங்கள் உருவாக்கப்பட்டுள்ளதாகவும், வழக்குரையில் வாதுரைத்திருப்பதை அறிய முடிகிறது.

8) தற்போது வாதிகள் 15.07.1996 தேதியிட்ட ஆவண எண்.3085/ 1996 ல் உள்ள கைரேகையை ஆர்.கே.ராமசாமியின் ஒப்புக்கொள்ளப்பட்ட கைரேகையுடன், கைரேகை நிபுணர் மூலமாக ஒப்பீடு செய்து பார்த்து அறிக்கை பெற வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

9) பிரதிவாதிகள் தரப்பில், தாக்கல் செய்துள்ள எதிருரையில் ஏற்கனவே வாதிகள் தரப்பில் கைரேகையை ஒப்பீடு செய்ய தாக்கல் செய்யப்பட்ட இ.ம.எண்.398/2011 ல் அனுமதிக்கப்பட்டு, கையெழுத்து நிபுணரின் அறிக்கை பெறப்பட்டுள்ளது என்றும், அதற்கு பின்னிட்டு இ.ம.எண்.1331/2018 ல் மீண்டும் கைரேகையை ஒப்பீடு செய்ய தாக்கல் செய்யப்பட்ட மனுவானது இந்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்கண்ட விவரங்களை மறைத்து வழக்கு விசாரணையை காலதாமதப்படுத்த வேண்டி இம்மனு தாக்கல் செய்திருப்பதாகவும் எதிர்வாதம் முன்வைத்திருப்பதை அறிய முடிகிறது.

10) வழக்கு ஆவணங்களை கவனமாக பரிசீலித்துப் பார்த்ததில், 1ம் வாதியின் கைரேகையை ஒப்பீடு செய்ய வாதிகள் தரப்பில் கடந்த 07.12.2010 ல் மனு தாக்கல் செய்யப்பட்டு அம்மனுவானது இ.ம.எண்.398/2011 ஆக கோப்பிற்கு

எடுக்கப்பட்டு கடந்த 22.12.2011ம் தேதி அனுமதிக்கப்பட்டு நீதிமன்ற ஆணையாளர் நியமிக்கப்பட்டு, நிபுணரின் அறிக்கை பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவானது கடந்த 13.12.2012ம் தேதி முடிக்கப்பட்டுள்ளது. அதன் பின்னிட்டு வாதிகள் தரப்பில் மீண்டும் அதே காரணத்திற்காக தாக்கல் செய்த மனுவானது இ.ம.எண்.1331/2018 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, கடந்த 05.10.2018ம் தேதி இந்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்து உத்தரவிடப்பட்டுள்ளது.

11) மேற்கண்ட விவரங்களை வாதிகள் தரப்பில் இம்மனுவில் குறிப்பிடாமல் மறைக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே இ.ம.எண்.398/2011 அனுமதிக்கப்பட்டு நிபுணரின் அறிக்கையும் பெறப்பட்டுள்ள சூழ்நிலையில் மீண்டும் அதே காரணத்திற்காக மனு தாக்கல் செய்யப்பட்டு தள்ளுபடி ஆன பிறகு மூன்றாவதாக அதே காரணத்தை குறிப்பிட்டு இம்மனு தாக்கல் செய்திருப்பதை அறிய முடிகிறது. வழக்கு விசாரணையானது தற்போது வா.சா.1–ஐ குறுக்கு விசாரணை செய்வதற்காக நிலுவையில் உள்ள நிலையில் குறுக்கு விசாரணைக்கு முன்னிலையாகாமல், இம்மனுவினை தாக்கல் செய்து வழக்கு விசாரணையை காலதாமதப்படுத்துவதாகவே தெரிய வருகிறது.

12) மேலும், உண்மை சங்கதிகளை மறைத்து மீண்டும், மீண்டும் இதே நீதிமன்றத்தில் ஒரே பரிகாரம் கோரி மனு தாக்கல் செய்து வருவதும் தெரிய

வருகிறது. மேற்கண்ட சூழ்நிலையில், வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவினை அனுமதிப்பது நீதியின் நலனுக்கு உகந்தது அல்ல என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவாக, மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.**

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2022ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 14ம் நாள் உத்தரவு பகரப்பட்டது.

**(ஒம்/–)எஸ்.வடிவேல்,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**அவிநாசி.**

**பிற்சேர்க்கை : இல்லை**

**(ஒம்/–)எஸ்.வடிவேல்,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**அவிநாசி.**